[திரு. கு. காமராஜ்] [17th August 1963

இல்லை. எந்தெந்த முதல் அமைச்சர்கள், மத்திய அரசாங்கத்தில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் ராஜிநாமா செய்யவேண்டும் என்று முடிவு செய்வது எனது மதிப்பிற்குரிய தலைவர் நேரு அவர்களின் இஷ்டத்திற்கு விடப்பட்டிருக்கிறது என்று விளக்கியிருக்கிறேன். ஆகையினால், அந்த முடிவு வரும் வரைக்கும் காத்திருக்க வேண்டும். அன்று எழுந்த கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். நான் ராஜிநாமா செய்யும்போது உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

MR. SPEAKER : In view of the explanation given by the Hon. Chief Minister, I think there is no Point of Order.

(2) NOTICE FOR CONSIDERATION OF BILLS.

திரு. செ. மாதவன் : 'ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர்,' ஸார் சட்டசபை விதிகள் 95-வது விதியின்படி, எந்த மசோதாவையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று பிரேரேபிக்பதற்கு முன்னால் ஆறு நாட்கள் அறிவிப்புத் தர வேண்டும். அப்படியிருக்கும்பொழுது திடீரென்று சில மசோதாக்களைக் கொண்டு வருகிறார்கள் போதிய அறிவிப்பு இன்றி. உதாரணமாக, எல். ஏ. பில் 13/1963-க்கு 14-ம் தேதி தான் நோட்டீஸ் வந்திருக்கிறது. அந்த மசோதாவிற்கு திருத்தம் கொடுப்பதற்கு எங்களுக்கு வாய்ப்பே இல்லை. இன்னொரு விதியின்படி மூன்று நாட்களுக்கு முன்னால் திருத்தங்கள் கொடுக்கவேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறது. இப்படிச் செய்வதினால், நம்முடைய சபையின் நிகழ்ச்சியில் மாறுபட்ட நிலையை உண்டாக்குவதினால், அதன் பேரில் தீர்ப்பு கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : நோட்டீஸை 'வெய்வ்' பண்ண ரூல்படி ஸ்பீக்கருக்கு அதிகாரம் இருக்கிறது.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இனம் சம்பந்தமான மசோதாக்களை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பிய பிறகு, செலக்ட் கமிட்டி யோசனை செய்து, இன்னும் அதற்கு ஒரு சப்ளிமெண்டரி பில் தயார் செய்யவேண்டுமென்ற எண்ணம் அங்கே ஏற்பட்டது. அதனால்தான் இந்த சப்ளிமெண்டரி பில் கொண்டுவரப்பட்டிருக்கிறது செலக்ட் கமிட்டியின் அபிப்பிராயத்திற்கு இணங்க. பாக்கி விட்டுப் போன விஷயங்களை யெல்லாம் சேர்த்து ஒரு சப்ளிமெண்டரி பில் கொண்டுவரவேண்டும், இல்லாவிட்டால் இந்த மசோதாக்களை நிறைவேற்றிக்கூட பலன் இல்லாமல் போய்விடும். ஆகவேதான் விட்டுப்போன விஷயங்களையெல்லாம் சேர்த்து இந்த சப்ளிமெண்டரி பில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த காரணத்தைக்காட்டி சபாநாயகர் அவர்களிடம் அனுமதி கோரினேம், ஆறு நாட்கள் நோட்டீஸ் வேண்டும் என்ற விதியை தளர்த்த வேண்டுமென்று.

SRI S. MADHAVAN : Mr. Speaker, Sir, I am referring to L.A. Bill No. 13 of 1963 (a Bill to amend the Madras District Police Act).